(பத்தாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

**இல. 10.]**

# பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரம்

## 2025 ஜனவரி 09, வியாழக்கிழமை, மு.ப. 9.30 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1.

87/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்கத்திற்குச் சொந்தமான வானொலி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிலையங்களிலும் பணிபுரியும் ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை, மேற்படி ஒவ்வொரு நிலையமும் ஈட்டிய இலாபம்/நட்டம் ஒவ்வோர் ஆண்டு வாரியாக வெவ்வேறாக யாதென்பதையும்;

(v) மேற்படி நிறுவனங்களை நட்டமடையாதவாறு கொண்டு நடத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2.

101/2024

கௌரவ சட்டத்தரணி தயாசிறி ஜயசேக்கர,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024.11.20 ஆம் திகதியளவில் குடிமனை மின் பாவனை மற்றும் வர்த்தக வகை மின் பாவனை ஆகிய ஒவ்வொன்றினதும் அடிப்படையில், ஒரு மின்சார அலகுக்காக அறவிடப்படுகின்ற கட்டணம் வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) 2024.10.21 ஆம் திகதி தொடக்கம் இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ள மின் கட்டண திருத்தங்கள் குறித்த விபரங்கள் யாவையென்பதையும்,

(iii) இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தீர்மானங்கள்/ அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக அத்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வழங்கும் தீர்மானங்களை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(v) மேற்படி ஆணைக்குழுவை கலைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மின்சாரத்திற்கென நிலையான விலையைப் பேண நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தகைய நிலையான விலை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3.

109/2024

கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது தொழிற்படும் தனியார் மின்னுற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அத்தகைய மின்னுற்பத்தி நிலையங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மின்னுற்பத்தி நிலைய உரிமையாளரின் பெயர் மற்றும் முகவரி வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை ஒவ்வோர் ஆண்டிலும் மேற்படி மின்னுற்பத்தி நிலையங்களின் உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மின்னுற்பத்தி நிலைய உரிமையாளர்களுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தங்கள் மிகவும் பாதகமானவையென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4.

133/2024

கௌரவ சட்டத்தரணி சித்ரால் பெர்னாந்து,— நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் நீதிமன்றக் கட்டமைப்பில் விசாரணையிலுள்ள ஐந்து வருடங்களுக்கு மேற்பட்ட குடியியல் வழக்குகள் மற்றும் பத்து வருடங்களுக்கு மேற்பட்ட குடியியல் வழக்குகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) வழக்கு விசாரணைகளை நிறைவு செய்வதில் ஏற்படுகின்ற தாமதத்தைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5.

174/2024

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடந்த 5 வருடங்களாக அரச துறையிலும் தனியார் துறையிலும் உள்ள ஊழியப் படையை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) கடந்த 10 வருடங்களில் அரச துறையின் நிரந்தர மற்றும் அமைய ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) கடந்த 10 வருடங்களில் அரச துறையின் ஊழியர்களின் சம்பளங்கள் மற்றும் ஊதியங்களின் மொத்த நிதிச் செலவு யாதென்பதையும்;

(iv) கடந்த 10 வருடங்களில் செலுத்தப்பட்ட ஓய்வூதியத் தொகையின் மொத்தத் தொகை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு வருடாந்த அடிப்படையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் அடுத்த 10 வருடங்களுக்கு அரச துறையினதும் தனியார் துறையினதும் ஊழியப் படையின் முன்கணிப்பு வெவ்வேறாக யாவை என்பதையும்;

(ii) அடுத்த 5 வருடங்களில் பணிக்கு உள்வாங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ள அரச ஊழியர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) அடுத்த 10 வருடங்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஓய்வூதியச் செலவுத் தொகை யாதென்பதையும்;

(iv) அடுத்த 10 வருடங்களுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு வருடாந்த அடிப்படையில் மேலும் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

6.

182/2024

கௌரவ ரவீந்திர பண்டார,— வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை தேசிய மின் கட்டமைப்பிற்கு புதிதாக சேர்க்கப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும் பிறப்பாக்கம் செய்வதற்கு எதிர்ப்பார்க்கப்படும் மின்சார கொள்ளளவு மற்றும் தற்போது பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சார கொள்ளளவு தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) மேற்குறிப்பிட்ட மின் உற்பத்தி நிலையங்களில் புதுப்பிக்கத்தக்க சக்தி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையத்திலிருந்தும் பிறப்பாக்கம் செய்யப்படும் மின்சார கொள்ளளவு தனித்தனியே எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) அடுத்த இரண்டு வருடங்களுக்குள் தேசிய மின் கட்டமைப்பை விருத்திசெய்வதற்கு வகுக்கப்பட்டுள்ள திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) புதுப்பிக்கத்தக்க சக்தியை விருத்திசெய்வதற்கான திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

7.

237/2024

கௌரவ சட்டத்தரணி (செல்வி) லக்மாலி ஹேமசந்திர,— வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொரியாவுக்கு வேலைவாய்ப்புக்காக செல்லும் இலங்கை ஊழியர்களுக்கு வழங்கப்படும் வீசா வகைகள் யாவை என்பதையும்;

(ii) E8 வீசாவின் கீழ் இலங்கை ஊழியர்களை கொரிய அரசாங்க வேலைவாய்ப்புகளுக்காக அனுப்புவதற்கு கடந்த அரசாங்கம் மேற்கொண்ட தீர்மானத்தின் அடிப்படை யாதென்பதையும்;

(iii) இதன் கீழ் கொரிய நாட்டிற்கு வேலைவாய்ப்புகளுக்காக சென்றுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி ஊழியர்கள் இன்னலுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனில், அவ்வாறு இன்னலுக்கு உள்ளாகியுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(vi) இவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கொரியாவிற்கு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கை ஊழியர்கள் E8 வீசாவின் கீழ் மாத்திரமே அனுப்பி வைக்கப்படுகிறார்களா என்பதையும்;

(ii) ஏனைய வீசா வகைகள் உள்ளதாயின், அவை யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

8.

239/2024

கௌரவ (டாக்டர்) நிஷாந்த சமரவீர,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள் மற்றும் ஏனைய பயிற்றுவிக்கப்பட்ட சுகாதாரத் துறையைச் சார்ந்த தொழில்வாண்மையாளர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள் என்பதையும்;

(ii) அதன் காரணமாக இலங்கையின் சுகாதாரத் துறைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) தற்போது இலங்கைச் சுகாதாரச் சேவையில் கடமையாற்றும்;

(ii) எதிர்காலத்தில் அரசாங்க சுகாதாரச் சேவையை முறையான சேவையாக முன்னெடுப்பதற்கு இருக்க வேண்டிய;

(iii) 2022 ஆம் ஆண்டு தொடக்கம் 2024 ஆம் ஆண்டு நவம்பர் வரை ஓய்வு பெறும் வயதை அடையாமல் சேவையிலிருந்து விலகிச் சென்ற;

(iv) நிபுணத்துவ பயிற்சி உட்பட பல்வேறு கல்வி சார் நிறுவனங்களில் தற்போது பயிற்சி பெற்று வருகின்ற;

வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், தாதியர்கள், நிறைவுகாண் மற்றும் துணை மருத்துவச் சேவை அலுவலர்கள் மற்றும் கனிஷ்ட நிலை அலுவலர்கள் ஆகியோரின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இவர்களைத் துரிதமாக சுகாதாரச் சேவையில் இணைத்துக் கொள்வதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

9.

247/2024

கௌரவ சட்டத்தரணி ரஊப் ஹகீம்,— சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'COVID-19 சந்தேகத்திற்கிடமான மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நோயாளி களுக்கான சிகிச்சைக்குரிய நடைமுறை வழிகாட்டுதல்கள்' தொடர்பான வெளியீட்டினைப் பற்றி அவர் அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெளியீட்டின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பங்களித்த துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அவர்கள் துறைசார் வளவாளர்களாகப் பணியாற்றும் போது அவர்கள் இணைக்கப்பட்டிருந்த நிறுவனங்கள் மற்றும் பதவிகள் யாவை என்பதையும்;

(iv) அவர்களை நியமிப்பதற்குப் பொறுப்புடைய அதிகாரி யார் என்பதையும்;

(v) அவர்களைத் தெரிவு செய்வதற்குப் பின்பற்றப்பட்ட அளவுகோல்கள் அல்லது அடிப்படைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வெளியீட்டின் பிரிவு 7 தொடர்பில் அவர் அறிந்திருக்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட பிரிவின் உள்ளடக்கத்திற்கும் விதப்புரைகளுக்கும் பொறுப்பான குறிப்பிட்ட துறைசார் வல்லுனர்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) பிரிவு 7 இன் உள்ளடக்கத்தினையும் விதப்புரைகளினையும் உருவாக்குவதற்குப் பயன்படுத்தப்பட்ட செயன்முறை, ஆவணங்கள் மற்றும் உசாத்துணைகள் என்பவற்றினை வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iv) பிரிவு 7 இல் காணப்படும் விதப்புரைகள் உள்நாட்டு அல்லது சர்வதேச மருத்துவ நெறிகள் மற்றும் மருத்துவ மானுடவியல் துறையிலுள்ள நிபுணர்களின் தொழில்சார் அபிப்பிராயத்திற்கு உட்படுத்தப்பட்டதா;

என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## சட்டமூல சமர்ப்பண முன்னறிவித்தல்

1.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— ஒதுக்கீடு,— 2025 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அந்நிதியாண்டின் போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாட்டைச் செய்வதற்கும்; அத்தகைய செயற்பாடுகளின் மீதான செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டு நிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணங்கள் என்ற வகையாக கொடுப்பனவை இயலச் செய்வதற்கும்; திரட்டு நிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும், அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர் விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

2.

பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்,— உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்),— குறித்தசில உள்ளூர் அதிகாரசபைகளின் தேர்தல்கள் கோரப்பட்டு பின்போடப்பட்டுள்ளவிடத்து, அத்தகைய உள்ளூர் அதிகாரசபைகள் தொடர்பில் புதிய நியமனப்பத்திரங்களைக் கோருவதற்காகவும் தேர்தல்களை நடாத்துவதற்காகவும் ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

3.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வுகள்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தின சபை அமர்வு நேரங்கள் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும், பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 8(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர்,— இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் 14 ஆம் பிரிவின் கீழ் செஸ் வரி தொடர்பில் அப்போதைய முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 2400/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*2.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 1),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் அப்போதைய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 மே 17 ஆம் திகதிய 2384/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*3.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 2),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபார பண்ட அறவீடு தொடர்பில் அப்போதைய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 யூலை 31 ஆம் திகதிய 2395/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*4.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 3),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 2404/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*5.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 4),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் மற்றும் 5 ஆம் பிரிவுகளின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 ஒக்டோபர் 14 ஆம் திகதிய 2406/02 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*6.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 5),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 நவம்பர் 01 ஆம் திகதிய 2408/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*7.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை (இல. 6),— 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 நவம்பர் 30 ஆம் திகதிய 2412/38 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*8.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— நலன்புரி நன்மைகள் சட்டத்தின் கீழ் அஷ்வசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம்,— 2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி நன்மைகள் சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழ் நலன்புரி நன்மைகள் தொடர்பில் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் விதிக்கப்பட்டு 2024 டிசம்பர் 21 ஆம் திகதிய 2415/66 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அஷ்வசும நலன்புரி நன்மைகள் கொடுப்பனவுத் திட்டம் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*9.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் அறிவித்தல்,— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் ஜே ஜே டெக்ஸ்டைல்ஸ் லங்கா (பிரைவெட்) லிமிடெட் தொடர்பில் அப்போதைய முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 ஆகஸ்ட் 26 ஆம் திகதிய 2399/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.12.03 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான அறிவித்தல் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*10.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை,— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3(4) ஆம் பிரிவின் கீழ் கொழும்பு வெஸ்ட் இன்டர்நெசனல் டேர்மினல் (பிறைவட்) லிமிட்டெட் தொடர்பில் அப்போதைய முதலீட்டு மேம்பாட்டு அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 செப்தெம்பர் 10 ஆம் திகதிய 2401/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2024.12.17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*11.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 4(1) மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், அப்போதைய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2024 மே 17 ஆம் திகதிய 2384/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*12.

பிரதம அமைச்சர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்,— துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் கீழ் கட்டளை,— 2011 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அபிவிருத்தி அறவீட்டுச் சட்டத்தின் 3(3) ஆம் பிரிவின் கீழ், துறைமுக மற்றும் விமான நிலைய அபிவிருத்தி அறவீடு தொடர்பாக அப்போதைய நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2024 மார்ச் 28 ஆம் திகதிய 2377/39 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2025.01.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*13.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்புத் தொகை,— செலவினத் தலைப்பு 117 - நிகழ்ச்சித்திட்டம் 02 — †2024 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பமாகி 2024 டிசம்பர் 31 ஆந் திகதி முடிவடையும் நிதி வருடத்தின் பயன்பாட்டுக்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திற்குரிய ஏனைய நிதியங்களிலிருந்து அல்லது நிதியிலிருந்து அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தற்றுணிவின் பேரில் அரசாங்கத்தினால் பெறப்படும் ஏதேனும் கடன் தொகையிலிருந்து ரூபா முப்பத்து மூன்று ஆயிரத்து எண்ணுற்றுப் பதினேழு மில்லியனை (ரூபா 33,817,000,000) விஞ்சாத மேலதிக நிதியினைச் செலுத்த வேண்டும் என்பதுடன், அந்நிதியினை இங்குள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு செலவுற வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரணை நிறைவேற்றுமாக:-

**அட்டவணை**

| | | | |
|---|---|---|---|
| **செலவினத் தலைப்பு** | **117** | - | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு (2023 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட அமைச்சின் பெயர்) |
| **நிகழ்ச்சித்திட்டம்** | **02** | - | அபிவிருத்தி நடவடிக்கைகள் |

| | |
|---|---|
| மூலதனச் செலவினம் | ரூ. 33,817,000,000 |
| **மொத்தச் செலவினம்** | **ரூ. 33,817,000,000** |

(அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2024 டிசம்பர் 06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட, 2024 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க.

1 முதல் 14 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 234,623,000,000 ஆகும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.